Second

# International Conference on Thirukkuṟaḷ

*June 27 – 29, 2018*

*Thirukkuṟaḷ Beyond the Frontiers of Tamil India*

*Liverpool, England*

**SOUVENIR**


Editorial Committee

**G. John Samuel**
Editor-in-Chief

**P. Marudanayagam**
**V. Murugan**
Editors

**Indra Samuel**
**Gnanachandra Johnson**
Associate Editors



INSTITUTE OF ASIAN STUDIES

**Institute of Asian Studies**
Chemmancherry, Chennai
India
2018

துறையும் "கேட்டல்" என்பதோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. அந்த வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது பிரயோக மொழியியல் நோக்கில் "கேள்வி" என்ற அதிகாரத்திலுள்ள குறட்பாக்களைப் பற்றி ஆய்வு செய்கின்றது.

## திருக்குறளில் திருவள்ளுவரின் மொழிநடை

*லலிதா மணிமாறன், கஸ்தூரி ஆறுமுகம்*
Faculty of Languages and Lingustics,
University of Malaya, 50603 Kuala Lumpur.

இந்த ஆய்வு உலகப்புகழ்ப் பெற்ற தமிழ் இலக்கியங்களிலுள் ஒன்றான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் மொழி நடையையும் அவரின் மொழி நடையிலிருந்து கிடைக்கப்பெறும் தனித்தன்மையையும் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. Leech and Short device என்ற சரிபார்ப்பு பட்டியல்தான் இவ்வாய்வுக்குக் கோட்பாடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முதல் நோக்கம் திருக்குறளில் பயன்படுத்திய நடையியல் கூறுகளான சொல்லாட்சி, இலக்கண அமைப்புகளைக் கண்டறிதல் ஆகும். அதைத் தொடர்ந்து அவரின் மொழி நடையிலிருந்து கிடைக்கப்பெறும் தனித்தன்மைகள் ஆராய்ந்து விளக்கப்படும். இவ்வாய்வுத் தரவியல் முறைமையை அணுகுமுறையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

## திருக்குறள் கூறும் குடும்ப உறவு நடத்தைக் கோலங்களும் அவற்றினை மேம்படுத்தும் நுட்பங்களும் - ஓர் உளவியல் நோக்கு

திருமதி மேனகா சிவகரன், உளவியல் துறை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஒரு தனிமனிதன் முழுமையான விருத்தியில் குடும்ப உறவுகளின் பங்களிப்புகள் மிகவும் அத்தியாவசியமானது என்பது உளவியல் உண்மை. இன்றையக் காலத்தில் அத்தகைய குடும்ப உறவுகளின் முக்கியத்துவம் அறியப்பட்டால் அவை உதாசீனப்படுத்தப்படுகின்றன. இதனால் பெற்றோர்களும் பிள்ளைகளும் உளரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையினை சரியான முறையில் கையாண்டு கொள்வதற்கு குடும்ப உறவுகளில் கணவன் மனைவியின் நடத்தைக் கோலங்களினையும், பெற்றோர் பிள்ளை உறவின் நடத்தைக் கோலங்களினையும், குடும்ப உறவினை மேம்படுத்த உதவும் நுட்பங்களினையும் உலகப் பொதுமறை நூலாம் திருக்குறளில் முன்மொழியப்பட்ட கருத்துக்களினை ஆதாரமாகக் கொண்டு தொகுத்துக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது. இதற்காகத் திருக்குறளின் விளக்க உரை நூல்களில் இருந்து இரண்டாம் நிலையடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு அவை விபரண ரீதியாக பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் திருவள்ளுவர் குடும்ப உறவுகளினைக் குறிப்பாகக் கணவன் - மனைவி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனையும் மற்றும் பிள்ளை - பெற்றோர் உறவு முறையின் முக்கியத்துவம் அதன் தன்மை தொடர்பாகவும் சிறந்த கருத்துக்களைக் கூறியுள்ளார். அக்கருத்துக்கள் தனிமனிதனின் முழுமையான உளரீதியான முதிர்ச்சிக்கு இட்டுச்செல்வதுடன் அவை ஒரு மனிதனை ஆரோக்கியமாக வாழ வைக்கும் என்பது திண்ணம்.